தமிழ்நாட்டில் வெள்ளத்தால் சேதமடைந்த சாலை, பாலங்களை சீரமைக்க

₹750 கோடி செலவு பண்ணியிருக்கோம்... ஒரு ரூபா கூட ஒன்றிய அரசு கொடுக்கல...

அமைச்சர் எ.வ.வேலு குற்றச்சாட்டு

வேலூர், செப்.20: 'தமிழ்நாட்டில் வெள்ளத்தால் சேதமடைந்த சாலை, பாலங்களை சீரமைக்க ₹750 கோடி தமிழ்நாடு அரசு செலவு செய்து உள்ளது. ஒன்றிய அரசிடம் கேட்டும் இதுவரை ஒரு ரூபாயை கூட தரவில்லை' என்று அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

வேலூரில் பென்ட்லெண்ட் அரசு மருத்துவமனை வளாகத்தில் ₹150 கோடியில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. இந்த கட்டிட பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று காலை ஆய்வு செய்தார். அப்போது நோயாளிகள் வந்து செல்லும் இடமாக உள்ளதால் லைட்ஸ் தரமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும் கட்டிட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அமைச்சர் எ.வ.வேலு நிருபர்களிடம் கூறியதாவது: கடந்த மழையின்போது தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, ஊட்டி ஆகிய இடங்களில் பாலங்களும், சாலைகளும் சேதமடைந்துள்ளது. இவை மாநில அரசு நிதியின் மூலம் சரி செய்யப்பட்டு வருகிறது.

இந்த பாதிப்புகளை ஒன்றிய நிதி அமைச்சரை அழைத்து சென்று காட்டியும் நிவாரண நிதி வழங்கவில்லை. சாலைகளை அமைக்கவும் நிதி வழங்கவில்லை. எத்தனை முறைதான் நிதி கேட்பது. ஒன்றிய அரசை குறை கூறும் நோக்கில் இதை சொல்லவில்லை. இந்த பணிகளுக்காக தமிழ்நாடு அரசு ₹750 கோடி செலவிட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் பல பாலங்கள் வேகமாக கட்டி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படுகிறது. கடந்த ஆட்சியில் 70 ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு நில எடுப்பு செய்யாமலேயே டெண்டர் பணிகளை செய்துவிட்டனர். தற்போது அதற்கான நில எடுப்பினை செய்து பாலம் முழுமை பெற சிறப்பு வருவாய் அலுவலர்கள் 5 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு துணை முதலமைச்சர் பதவி வழங்குவது குறித்து முடிவு செய்ய வேண்டியது முதல்வர் தான். அது முதலமைச்சரின் அதிகாரம். அவர் முடிவு செய்தால் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம். ஒன்றிய அரசு சார்பில் அனைத்து மாநில அமைச்சர்களுடன் வரும் 30ம் தேதி ஆய்வு கூட்டம் நடைபெற உள்ளது. இதில் தமிழகத்தின் சார்பில் நான் கலந்துகொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

'காலாவதியான சுங்கச்சாவடிகளை ஒன்றிய அரசு மூடாதாம்'

அமைச்சர் எ.வ.வேலு கூறுகையில், 'தமிழகத்தில் காலாவதியான சுங்கச்சாவடிகளை மூடவேண்டும் என பல முறை ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியும், நேரிலும் வலியுறுத்தினோம். ஆனால் ஒன்றிய அரசு, சுங்கச்சாவடிகளை மூட முடியாது என கூறி வருகிறது. சுங்க கட்டணத்தை குறைக்க வலியுறுத்தியும் கண்டுகொள்ளவில்லை' என்றார்.

அண்ணனின் லிவிங் டுகெதர் காதலி மகளுடன் தம்பி ஓட்டம்

மார்த்தாண்டம், செப்.20: குமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே திருவிதாங்கோடு பகுதியை சேர்ந்த 34 வயது பெண்ணுக்கு 16 வயதில் மகனும், 15 வயதில் மகளும் உள்ளனர். கணவரிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அந்த பெண் மகன், மகளுடன் தனியாக வசித்து வருகிறார். பெண்ணின் 15 வயது மகள் அங்குள்ள ஒரு பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தநிலையில் திடீரென படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு வீட்டிலேயே இருந்து வந்தார். இந்நிலையில் அந்த பெண்ணுக்கு குருந்தன்கோடை சேர்ந்த சிவக்குமார் என்ற வாலிபருடன் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் இருவரும் நெருங்கி பழக தொடங்கினர். இதையடுத்து திருமணம் செய்துகொள்ளாமல் ஒரே வீட்டில் லிவிங் டுகெதர் உறவில் வாழ்ந்து வந்தனர்.

இதற்கிடையே சிவக்குமாரின் தம்பி கண்ணன் (20), அடிக்கடி அண்ணனை பார்ப்பதற்காக அங்கு வந்து சென்றுள்ளார். அப்போது 15 வயது சிறுமி மீது ஆசை வந்துள்ளது. இதனால் சிறுமியிடம் நெருக்கமாக பழகி காதல் வலை வீசியுள்ளார். இதில் சிறுமி கண்ணனின் காதல் வலையில் விழுந்து விட்டார். இந்த விபரம் எதுவும் சிறுமியின் தாயாருக்கு தெரியாது. காதலனின் தம்பி என்பதால் அவருக்கு சந்தேகம் வரவில்லை.

சம்பவத்தன்று மதியம் சுமார் 12 மணியளவில் சிறுமி திருவிதாங்கோட்டில் உள்ள தாத்தா வீட்டில் இருந்தார். அப்போது தாத்தாவின் செல்போனுக்கு அழைப்பு வந்தது. அதனை அவர் எடுத்து பேசியபோது, நான் கண்ணன் பேசுகிறேன். சிறுமியின் பெயரைக்கூறி அவளிடம் போனை கொடுங்கள் என்று கூறியுள்ளார்.

தாத்தாவும், கண்ணன் தெரிந்த பையன் தானே என நினைத்து சிறுமியிடம் செல்போனை கொடுத்தார். செல்போனை வாங்கி பேசிய சிறுமியிடம், ஆசை வார்த்தைகளை அள்ளிவீசியதோடு, திருமணம் செய்துகொள்ளலாம் என கூறியுள்ளார். சற்றும் யோசிக்காத சிறுமி, தாத்தாவுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். அங்கு வந்த கண்ணன் சிறுமியை அழைத்துக் கொண்டு தப்பிவிட்டார். இதற்கிடையே பேத்தியை காணாமல் தாத்தா அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்து சிறுமியின் தாயாருக்கு அவர் தகவல் அளித்தார்.

அப்போது சிறுமியின் தாயார் தொடர்ந்து விசாரிக்கையில் கண்ணனையும் காணவில்லை. எனவே கண்ணன், தனது மகளை கடத்தி சென்றிருப்பதை உறுதி செய்த சிறுமியின் தாய், மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதன்பேரில் வழக்குப்பதிந்த போலீசார் சிறுமியை கண்ணன் எங்கு அழைத்து சென்றார். இருவரும் தற்போது எங்கு இருக்கிறார்கள்? என தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மகனை காப்பாற்ற இறங்கியபோது கல்லணை கல்வாயில் மூழ்கி எஸ்எஸ்ஐ பலி

தஞ்சை, செப். 20: தஞ்சாவூர் சீனிவாசபுரம் அருகே சேவப்பநாயக்கன் ஏரி பகுதியை சேர்ந்தவர் ராஜா (56).

வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழப்பு பிரிவில் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்தார். தனது வளர்ப்பு நாயை குளிப்பாட்டுவதற்காக மகன் ராகுல், மகள் லாவண்யாவுடன் நேற்று காரில் தஞ்சாவூர் அருகே வண்ணாரப்பேட்டை மானோஜிப்பட்டி பாலம் அருகே கல்லணை கால்வாய்க்கு ராஜா சென்றார்.

கால்வாயில் குளிப்பாட்டும் போது நாய் பள்ளத்துக்கு சென்றதால், அதை காப்பாற்றுவதற்காக ராகுல் சென்றார். இருவரும் தண்ணீரில் சிக்கியதை பார்த்த ராஜாவும் ஆற்றுக்குள் இறங்கி அவர்களை மீட்க முயன்றார். அப்போது தண்ணீரில் மூழ்கி ராஜா பரிதாபமாக பலியானார்.

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்

CUB

அக்ஷயா டவர்ஸ், மனை எண்.354, ECR சாலை, நீலாங்கரை, சென்னை - 600 115. போன்: 63799 00214

தங்க நகைகள் ஏல அறிவிப்பு

எங்கள் வங்கியின் கிளை அலுவலகத்தில் தங்க நகைகளின் பேரில் கடன் பெற்றுள்ள கீழ்கண்ட நபர்களுக்கு, நகைகடன் கெடு முடிந்து நெடுநாட்கள் ஆகியும் கடன் பாக்கி முழுவதும் செலுத்தி நகைகளை திரும்பப்பெற நோட்டீஸ் அனுப்பியும், கடன் கணக்கை முடித்து நகைகளை மீட்காதபடியால் உடனடியாக அசல் வட்டி மற்றும் இதர செலவுகள் உட்பட கடன் முழுவதும் செலுத்தி நகைகளை திரும்பப்பெற வேண்டுமென கோரப்படுகிறது. அப்படி தவறினால், கடனுக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகள், கடன் பெற்றவர்களின் செலவிலேயே வருகிற **26.09.2024 காலை 11.00 மணிக்கு** வங்கி கிளை அலுவலகத்தில் கிளை மேலாளர் அவர்களால் பகிரங்க ஏலம் விடப்படும் எனவும் அல்லது மறு ஏல அறிவிப்பின்றி வங்கி நிர்வாகத்தின் சௌகர்யப்படி வேறு ஏதாவது தேதியில் ஏலம் விடப்படும் எனவும் இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கீழகண்ட கடன் பெற்றவர்களில் யாராவது இறந்திருந்தால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும், பாத்தியப்பட்டவர்களுக்கும் வங்கி நோட்டீஸ் கிடைக்கப் பெறாதவர்களுக்கும் பொருந்தும். ஏலத்தில் பெற்ற தொகையில் மேற்படி நகைகடனுக்கு உரிய தொகை போக மீதியிருந்தால் கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிற கடன்களுக்கோ ஜாமீன்தாரராக உள்ள கடன்களுக்கோ வரவு வைக்கப்படும். ஏலத்தில் பெற்ற தொகை கடன் தொகையை விட குறைவாக இருந்தால் மீதி தொகை சட்ட நடவடிக்கை மூலம் வசூலிக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது. கடன் பெற்ற நபர்கள் தங்கள் கடன் கணக்கில் ஏதேனும் பகுதி பணம் செலுத்தியிருந்தாலும், ஏல தேதிக்குள் கடன், வட்டி, இதர செலவுகள் முழுவதும் கட்டி நகைகளை மீட்காவிடில் அந்த நகைகளும் ஏலம் விடப்படும் என அறிவிக்கின்றோம்.

இந்த நடவடிக்கைகளை மாற்றவோ, ஒத்திப்போடவோ, நிறுத்திவைக்கவோ, குறிப்பிட்ட நகைகளை ஏலத்திலிருந்து நீக்கிவைக்கவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு என்பதனை அறியவும்.

வ. எண்	நகை கடன் எண்	கடன் தேதி	கடன் பெற்றவர் பெயர் மற்றும் முகவரி	நகைகளின் எடை கிராமில்
1.	502112137016427	01.03.2024	**இளங்கோ ராஜா**, புதிய எண்.2, பழைய எண்.10, பரமேஸ்வரன் நகர், 1வது தெரு, ஆதம்பாக்கம், காஞ்சிபுரம் - 600 088	16.70

இடம் : சென்னை
தேதி : 20.09.2024
கிளை மேலாளர்

பின் குறிப்பு: (1).ஏலதாரர்கள தங்கள் PAN விவரங்கள் கட்டாயம் எடுத்து வர வேண்டும். உரிய KYC ஆவணங்கள் அசல் மற்றும் அதன் நகல் உள்ளவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். (2). ஏல தேதி அன்றே ஏலம் எடுத்தவர்கள் முழு தொகையும் செலுத்த வேண்டும். இல்லாவிடில் ஏல முன்தொகை திருப்பி தரப்படட்டமாட்டாது.

Karur Vysya Bank (KVB) Smart way to bank

சொத்து வசூல் கிளை
எண்.1, பத்மாவதியார் ரோடு, 2வது தளம், (பீட்டர்ஸ் ரோடு அருகில்) கோபாலபுரம், சென்னை-600 086, போன்: 044 – 2835 9331/33, Mob: 89398 69789

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை **கரூர் வைஸ்யா வங்கி, சென்னை - வளசரவாக்கம் கிளையின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களிடமிருந்து பெறவேண்டிய கடன்தொகையான ₹ **32,77,879.41** (ரூபாய் முப்பத்திரண்டு லட்சத்து எழுபத்தேழாயிரத்து எண்ணூற்று எழுபத்தொன்பது மற்றும் பைசா நாற்பத்தொன்று மட்டும்) மற்றும் 06.09.2024 முதல் வட்டி, இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **10.10.2024** அன்று விற்பனை செய்யப்படும் என இதன்மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர் & ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: Mrs.ராமலட்சுமி முருகேசன், W/o.Mr.முருகேசன், எண்.232, V V கிரி தெரு, ராமகிருஷ்ணா நகர், ஆழ்வார்திருநகர், நெசபாக்கம், சென்னை-600087. மேலும்: எண்.1/197, ஜானகி ராதா தெரு, வளசரவாக்கம், சென்னை-600087

அசையா சொத்து விவரம்

தென் சென்னை பதிவு மாவட்டம், படப்பை சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.289/2A மற்றும் பழைய பட்டா எண்.4655 படி, பழைய பட்டா சர்வே எண்.289/2A1B படி, புதிய பட்டா எண்.8986, புதிய பட்டா படி பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.289/15, (சென்னை CMDA செயலாளரால் வழங்கப்பட்ட அதிகார பிரதிநிதித்துவத்தின்படி படப்பையிலுள்ள குன்றத்தூர் பஞ்சாயத்து யூனியன் ஆணையரால் வழங்கப்பட்ட 14.09.2007 தேதியிட்ட அனுமதி எண்.010-30329, D.Dis.எண்.5007/07/A3, கட்டிட திட்ட அனுமதி P.P.எண்.1974/2012, D.Dis.எண்.4096/12/A3, P.P.எண்.1923/2014, Di.Dis.எண்.1870/14/A3) **மனை எண்.70A4, ஃப்ளாட் எண்.G-1, தரைத்தளம், முல்லை அபார்ட்மெண்ட் எனப்படும் கட்டிடம், செல்வா நகர், வரதராஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்** என்னும் முகவரியில் **760 சதுர அடி குடியிருப்பு ஃப்ளாட்** (மூடிய கார் பார்க்கிங் உட்பட). மொத்தமுள்ள 2320 சதுர அடி நிலத்தில் **308 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். சொத்தானது Mrs.M.ராமலட்சுமி பெயரிலுள்ளது. எல்லைகள்: வடக்கு: மனை எண்.63, தெற்கு: மனை எண்.70A3 & 12 அடி பொது வழிப்பாதை, கிழக்கு: மனை எண்.70B, மேற்கு: மனை எண்.69. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 58 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 58 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 40 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 40 அடி. **Geo-Coordinates – 12.926472 80.074944**

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ 22,00,000/-	டேவணித்தொகை (EMD)	₹ 2,20,000/-
ஏல உயர்வுத்தொகை	₹ 25,000/-		

சொத்துக்களை பார்வையிடும் நாள் & நேரம்: 20.09.2024 முதல் 09.10.2024 வரை காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் சொத்துக்களை பார்வையிடலாம்.

இ-ஏல விண்ணப்ப படிவங்களை ஆன்லைனில் சமர்பிக்க வேண்டிய கடைசி தேதி & நேரம் 09.10.2024 அன்று மாலை 5.00 மணி வரை

இ-ஏலத் தேதி மற்றும் நேரம்: **10.10.2024** அன்று மாலை **03:00** மணி முதல் **04.00** மணி வரை விற்பனை முடியும் வரை ஒவ்வொரு 10 நிமிட காலவரையற்ற நீடிப்புகளுடன் இ-ஏலமானது **https://www.matexauctions.com**-என்ற இணையதளத்தின் வாயிலாக நடைபெறும்

Nodal Bank Account Name: The Karur Vysya Bank Ltd., Central Office Bid Collection, Account Number: 1101351000000973, IFSC Code: KVBL0001101, EMD for the account of Ramalakshmi Murugesan

தொடர்புகொள்ள வேண்டிய நபர் & தொலைபேசி எண்: முதன்மை மேலாளர் - 89398 69789, 77085 35548
Gen Ph Nos. 044 – 28359331/33/34 e-Mail: arbchennai@kvbmail.com

விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: www.kvb.co.in / Property Under Auction சொத்துக்களை ஏலம் விடும் இணையதள முகவரி: https://www.matexauctions.com சேவை வழங்குனர் M/s. Matex Net Pvt. Ltd.

SARFAESI சட்டம், 2002 விதி 9(1)-ன்கீழ் 15 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன் பாக்கியை **10.10.2024** இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன்பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி, இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

தேதி : 18.09.2024
இடம் : சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

துப்பாக்கி லைசென்ஸ் கேட்டு விஏஓ, தாசில்தாரை மிரட்டியதால் கைது

போலி பெண் ஐஏஎஸ் அதிகாரி பாஜ நிர்வாகி சிறையில் அடைப்பு

ஜோடியாக தில்லாலங்கடி வேலை

தூத்துக்குடி, செப். 20: தூத்துக்குடி எஸ்பி அலுவலகத்தில், நேற்று முன்தினம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. அப்போது நெல்லை மாவட்டம் தாழையூத்து, சங்கர்நகரைச் சேர்ந்த பாஜ நிர்வாகி ரூபிநாத் (42) என்பவர் மங்கையர்க்கரசி (44) என்ற பெண்ணுடன் மனு அளித்தார்.

அந்த மனுவில், 'புதுக்கோட்டையை சேர்ந்த ஆல்வின் ஜெபஸ்டின் என்பவர் ₹10 லட்சம் தர வேண்டும். அதை வாங்கித் தர வேண்டும்' என குறிப்பிட்டிருந்தார். வருகை பதிவேட்டில் மங்கையர்க்கரசி தன்னை ஐஏஎஸ் அதிகாரி எனவும், உத்தரபிரதேச மாநில கல்வித்துறை செயலர் என்றும் கூறியிருந்தார். இதனால் சந்தேகமடைந்த எஸ்பி ஆல்பர்ட் ஜான், தீவிரமாக விசாரித்தபோது அவர் போலி ஐஏஎஸ் அதிகாரி என தெரியவந்தது.

இதையடுத்து தூத்துக்குடி சிப்காட் போலீசார் வழக்கு பதிந்து மங்கையர்க்கரசி, ரூபிநாத்தை கைது செய்து சிறையில் அடைத்தனர். ரூபிநாத்தின் காரும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதுகுறித்து போலீசார் கூறியதாவது: மங்கையர்க்கரசி சொந்த ஊர், திண்டுக்கல் மாவட்டம் மேல ஊத்தம்பட்டி அருகே ஸ்ரீராமபுரம். எம்பில் படித்துள்ள மங்கையர்க்கரசி கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார். 10 ஆண்டுகளுக்கு முன்பு கணவரை பிரிந்த இவர் மோசடி புகார்கள் எழுந்ததை தொடர்ந்து நெல்லைக்கு வந்து, பாஜ நெல்லை மாவட்ட இலக்கிய அணி தலைவர் ரூபிநாத்துடன் பழக்கம் ஏற்பட்டு சேர்ந்து வசித்துள்ளார். நுனி நாக்கில் ஆங்கிலம் பேசி அவருக்காக ஒன்றிய அரசில் பல காரியங்களை செய்துள்ளார். கடந்த 2 நாட்களுக்கு முன்பு பாஜ நிர்வாகி ரூபிநாத்துப்பாக்கி உரிமம் கேட்டு நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். அதுகுறித்து விசாரணை நடத்த நெல்லை தாசில்தார் ஜெயலெட்சுமி, ரூபிநாத் வீட்டிற்கு சென்றபோது அங்கிருந்த மங்கையர்க்கரசி, தான் ஒரு ஐஏஎஸ் அதிகாரி என்றும், தன்னை விசாரணை நடத்த எப்படி வரலாம் எனவும், ரூபிநாத்துக்கு உடனே துப்பாக்கி உரிமம் வழங்க வேண்டும் எனக் கூறி தாசில்தாரை மிரட்டி உள்ளார். இதுபற்றி தாசில்தார் ஜெயலட்சுமி புகாரின்படி தாழையூத்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





இவ்வாறு அவர்கள் கூறினர்.

போலி ஐஏஎஸ் அதிகாரி மங்கயர்க்கரசியுடன் பாஜ நிர்வாகி ரூபிநாத் கடந்த பிப்ரவரி மாதம் பிரதமர் மோடி நெல்லை வந்தபோது ஹெலிபேடில் வரவேற்பு அளித்து படம் எடுத்துள்ளார். மேலும், மாஜி கவர்னர் தமிழிசை, எம்எல்ஏக்கள் வானதி ஸ்ரீனிவாசன், நயினார் நாகேந்திரன், முன்னாள் அமைச்சர் விகே சிங் என பல விஐபிகளிடம் நெருக்கமாக புகைப்படங்கள் எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு உள்ளார்.

தவறான சிகிச்சை; மாணவன் பலி போலி பெண் மருத்துவர் கைது

திருப்பத்தூர், செப்.20: திருப்பத்தூர் மாவட்டம், பொம்மிக்குப்பம் சின்ன மாரியம்மன் கோயில் தெருவை சேர்ந்தவர் உதயகுமார். இவரது மகன் கவியரசு (9). 5ம் வகுப்பு படித்து வந்தார். கடந்த 17ம் தேதி கவியரசுக்கு திடீரென காய்ச்சல் ஏற்பட்டது. இதையடுத்து, மாணவனை அங்கு கிளினிக் நடத்தி வந்த பெண் மருத்துவர் நந்தனியிடம் பெற்றோர் அழைத்து சென்றனர். அவர் மாணவருக்கு ஊசி போட்டுள்ளார். ஆனால் காய்ச்சல் குணமாகவில்லை.

இதையடுத்து தர்மபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றி பரிசோதித்தபோது டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலன்றி கவியரசு உயிரிழந்தார். போலி மருத்துவர் நந்தினியை (28) தவறான சிகிச்சை அளித்ததால் மாணவன் இறந்தது தெரிந்தது. இதையடுத்து நந்தினியை போலீசார் கைது செய்தனர்.

ஆட்சியில் பங்கு கேட்கும் சூழலே எழவில்லை

திருமாவளவன் பேட்டி

திருவிடைமருதூர், செப்.20: தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் அருகே மானம்பாடியில் விசிக தலைவர் திருமாவளவன் எம்பி நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

டெல்லியில் இருப்பது போல கூட்டணி ஆட்சி தமிழ்நாட்டில் உருவாகவில்லை என்றால் தமிழ்நாட்டில் ஆண்ட கட்சிகளாக அல்லது ஆளும் கட்சிகளாக இருக்கும் அதிமுக, திமுக தனித்து ஆட்சி செய்யக்கூடிய அதிகாரத்தை பகிர்ந்தளிக்க இயலாத நிலையில் மக்களின் ஆதரவை பெற்றிருக்கிறார்கள் என்று தான் அதற்கு பொருள். இந்த அடிப்படையை உணராத கட்சி அல்ல விடுதலை சிறுத்தைகள் கட்சி. எங்களுக்கே அந்த விழிப்புணர்வு இருக்கும்போது நூற்றாண்டுகளை கடந்த காங்கிரஸ் கட்சிக்கு தெரியாதது அல்ல. கம்யூனிஸ்ட் கட்சியும் தெரியாதவர்கள் அல்ல. எனவே எந்த நேரத்தில் எதை கேட்க வேண்டும், எப்படி கேட்க வேண்டும், அதற்கான காலம் கனிந்திருக்கிறதா, இதையெல்லாம் அறிந்தவர்கள் தான் திமுக கூட்டணியில் இருக்கின்றோம்.

பாஜவினரால் வாக்கு வங்கியை அதிகரிக்க முடியவில்லை. திமுக, அதிமுகவுடன் சேர்ந்து ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள முடியவில்லை. அதன் ஆற்றாமையால், இயலாமையால் பாஜவினர் திமுகவை குறை சொல்லி புலம்புகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
சென்னை – 32

"தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுசூழல் ஆய்வகங்கள் மற்றும் மாவட்ட சூற்றுசூழல் ஆய்வகங்களை மேம்படுத்துவதற்கான ஆவியாகும் கரிம சேர்மங்கள் (VOC) பகுப்பாய்வியின் கொள்முதல்"

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : TNPCB/DDL/Pur-II/F. No. 1571-2 /2024 Dt. 09 .09.2024

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கசிவுகள் மற்றும் நீர் மாசு தொடர்பான மனுக்கள், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், NGT மற்றும் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட புகார்கள் எண்ணெய் கசிவுகள், எரிவாயு போன்ற பேரழிவுகளுக்கு வழிவகுக்கும் சூறாவளி, கனமழை, மேக வெடிப்பு மற்றும் திடீர் வெள்ளம் போன்ற சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கு அவசர நடவடிக்கையாக களத்தில் உள்ள மாசு, மாசுபாட்டின் தன்மையை உடனடியாக மதிப்பிடுவதற்கு கள நோக்கங்களுக்காக வாங்கப்பட்ட கருவிகள் பயன்படுத்தப்படும்

ஒப்பந்தப்புள்ளி படிவத்தை **https://tntenders.gov.in** & **www.tnpcb.gov.in** இணையதளத்தில் **20.09.2024** முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் கடைசி நாள் : **07.10.2024.**

உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை – 32

செமதொஇ/3790/ஒப்பந்தப்புள்ளி/2024

பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறை

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (Mech/QC) அவர்களால் குறுகிய கால மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 1316A/ 2024
சிப்பம் 2 கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு 1 எண்ணிக்கையில் புல்டோசர் (D80A12 அல்லது அதற்கு இணையான உபகரணம்) 3000 மணி நேரத்திற்கு வாடகைக்கு அமர்த்தும் பணி.

முன்வைப்புத் தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி
ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **27.09.2024 பிற்பகல் 3.00, மணி**
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் **30.09.2024 பிற்பகல் 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3794 / ஒப்பந்தப்புள்ளி / 2024
கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்)

கடன் தொல்லையால் சோகம்

3 குழந்தைக்கு விஷம் கொடுத்து தாய் தற்கொலை முயற்சி

4 வயது சிறுவன் பரிதாப பலி

தென்காசி, செப். 20: தென்காசி மாவட்டம் கடையம் அருகே செல்லபிள்ளையார்குளத்தை சேர்ந்தவர் குமாரவேலு (45). புரோட்டா மாஸ்டர். இவரது மனைவி உச்சிமாகாளி (40). பீடி சுற்றும் தொழிலாளி. இவர்களுக்கு 7 வயதில் 2ம் வகுப்பு படிக்கும் பழனி சக்திகுமரன், அங்கன்வாடி மையம் செல்லும் 6 வயது இந்திரவேல், நான்கு வயதில் பிரவின்ராஜ் ஆகிய மூன்று மகன்கள் உள்ளனர். குடும்ப செலவுக்காக உச்சிமகாளி சுய உதவிக்குழுவில் கடன் வாங்கியுள்ளார்.

இதை திரும்ப செலுத்த முடியாமல் ஐந்து தனியார் நிதி நிறுவனங்களில் இருந்து ரூ.3 லட்சம் வரை கடன் பெற்றுள்ளார். இந்நிலையில் நேற்று வார தொகையாக ₹2500 செலுத்த வேண்டியிருந்தது. இதற்காக அவர் அக்கம் பக்கத்தில் கடன் கேட்டுள்ளார். ஆனால் அவருக்கு பணம் கிடைக்கவில்லை. பணம் கொடுத்தவர்கள் திரும்ப கேட்டு நெருக்கடி கொடுத்துள்ளனர். இதனால் மனமுடைந்த அவர் குழந்தைகளுடன் தற்கொலை செய்ய முடிவெடுத்துள்ளார். நேற்று காலை 8 மணியளவில் அரளி விதையை அரைத்து தானும் குடித்து விட்டு, மூன்று குழந்தைகளுக்கும் கொடுத்துள்ளார். அவர்கள் அடுத்தடுத்து மயங்கி விழுந்தனர். தகவலின் பேரில் ஆழ்வார்குறிச்சி போலீசார் 4 பேரையும் மீட்டு தென்காசி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி பிரவின்ராஜ் இறந்தான். மற்ற மூன்று பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி எண்.8(6) கீழ் உடன் விதி எண்.9(1) படிக்கவும்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் மின் -ஏல விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/ பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எஃப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 07–10–2024 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 07–10–2024 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை –600 024 இடத்தில் 05–10–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட சுருக்கமான விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
1.	9165453	திரு.மோசஸ் பிரகாஷ் திருமதி.ஆனந்தி D	Rs. 56,76,380/- 26-02-2018	Rs. 35,00,000/- (ரூபாய் முப்பத்தி ஐந்து இலட்சம் மட்டும்)	Rs. 3,50,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	கையகம்

அசையா சொத்தின் விவரங்கள்: அனைத்து துண்டு மற்றும் பகுதியும் கொண்ட நிலம் அத்துடன் கட்டடம் அளவீடு பரப்பளவு 1560 ச.அடி, சர்வே எண்.315/2, பட்டா எண்.4590, பட்டாவின்படி சர்வே எண்.315/10, மனை எண்.15, ஸ்ரீ அருணாசலேஸ்வரர் நகர், சிஎம்டிஏ அங்கீகார எண்.PPD/LO/எண்.34/2003, சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார் பதிவு மாவட்டம், குன்றத்தூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள்; கிழக்கு: மனை எண்.14, மேற்கு: மனை எண்.16, வடக்கு:24 அடி சாலை, தெற்கு: 10 அடி பாதை, மனை எண்.18. அளவீடு; கிழக்கு:60 அடி, மேற்கு: 60 அடி, வடக்கு: 26 அடி, தெற்கு: 26 அடி
குறிப்பு: டிசிஎச்எஃப்எல் (OS/168/2015)க்கு எதிராக கடன்தாரர், காஞ்சிபுரம் துணை நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது. கூறப்பட்ட வழக்கின் மீது டிசிஎச்எஃப்எல் நிறுவனத்துக்கு எதிராக எந்த ஸ்டே உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
2.	TCHHL04 04000100 070915	திருமதி. ரேவதி P திருமதி. கன்னியம்மாள் P	ரூ. 41,38,719/– (ரூபாய் நாற்பத்தி ஒரு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து எழுநூற்றி பத்தொன்பது மட்டும்)& 17–05–2022	Rs. 25,00,000/- (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம் மட்டும்)	Rs. 2,50,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	கையகம்

அட்டவணை A: அடங்கிய அனைத்துத் துண்டுகளும் பகுதிகளும் அடங்கியுள்ள காலி நிலம் மொத்தம் உள்ள 1,16,412 ச.அடி அல்லது 2 ஏக்கர்கள் 67 சென்ட்கள் உள்ள நிலத்தில் திறந்தவெளி விகிதமாக மறைமலைநகர் நகராட்சிக்கு வழங்கப்பட்ட 11,679 ச.அடி நிலம் போக, மீதமுள்ள 1,04,733 ச.அடி நிலத்தில் அங்கீகார எண்.80C/2021, பரப்பளவு 897 ச.அடி உள்ள பிளாட் எண்.A–409, நான்காவது தளம், பிளாக் A –இல் கீழ்புறத்தில் உள்ள கார் நிறுத்துமிடம் உட்பட பிரிக்கப்படாத 425.36 ச.மீட்டர் பங்கு உள்ள சொத்தின் சர்வே எண்கள்: 191/3B & 191/4, பட்டா எண். 2609 (பட்டாவின்படி, சர்வே எண்: 191/3B1 & 191/4(A) இல் உள்ள சொத்து. செங்குன்றம் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், எல்லைகள்; **வடக்கு:** சர்வே எண்.230 கொண்ட காலி நிலம், **தெற்கு:** செங்குன்றம் சாலை, **கிழக்கு:** சர்வே எண்கள் 191/4B, 3B3 மற்றும் 2A2A1 கொண்ட சொத்து, **மேற்கு:** மறைமலை நகர் முனிசிபாலிட்டிக்கு கொடுக்கப்பட்ட ஒஎஸ்ஆர் நிலம். இது செங்கல்பட்டு பதிவு மாவட்டம், செங்கல்பட்டு இணை II சார் பதிவு மாவட்டத்தில் அடங்கியுள்ளது. **அட்டவணை B: (இங்குள்ள சொத்து விற்பவரிடம் இருந்து வாங்குபவருக்கு அளிக்கப்பட்டது)** அட்டவணை– A இல் 425.36 ச.அடி பரப்பளவு உள்ள பிரிக்கப்படாத பங்கு மற்றும் பயன்கள் உள்ள நிலம்.
குறிப்பு: டிசிஎச்எஃப்எல் (F1.No2/2023–Bin I.P. No.8/2022)க்கு எதிராக கடன்தாரர் தொடர்ந்த திவால் மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. கூறப்பட்ட வழக்கின் மீது டிசிஎச்எஃப்எல் நிறுவனத்துக்கு எதிராக எந்த ஸ்டே உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. எனவே ஏலதாரர்கள் ஏலம் சமர்ப்பிப்பதற்கு முன்பு இது குறித்து முழுமையாக அறிந்து கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். எனவே ஏலத்தின் முடிவு என்பது இந்த வழக்கின் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர்(கள்) ஆகியோருக்கு இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.
இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்கும்விதமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.
விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்:
கவனிக்க: மின்–ஏலம் ஆனது https://bankauction.in/ என்ற இணைய முகப்பு மூலம் 07–10–2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.
விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:
1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்ப உரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2.** நிர்ணய விலைக்கு குறைவாக அசையாச் சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது. **3. ஏலம் உயர்த்தும் தொகை: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4.** சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் TATA CAPITAL HOUSING FINANCE LTD பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத் தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகை செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். **5.** உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வ தகுதியடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்கு குறைவில்லாதது என்பதை பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாக காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **6.** பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனையை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7. முன் அனுமதியின் பேரில் 25–09–2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம். 8.** வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்கு பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ஏலப்புள்ளி தொகையின் இருபத்தைந்து சதவீதத்தை செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், ஏலமிடப்பட்ட சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். **9.** மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகை செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக செலுத்த வேண்டும். 15வது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15 ஆவது நாளுக்கு பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். **10.** மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணம்பட்டுவாடா செய்ய தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும். ஏற்கெனவே ஏலம் எடுத்தவர் சம்பந்தப்பட்ட நிலம்/ தொகை தொடர்பாக எந்த உரிமையையும் கோர முடியாது. **11.** மேற்கூறப்பட்டசொத்து தொடர்பான **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்குத்** தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள் பற்றியும், மேலும் அந்த சொத்து தொடர்பான சொத்தின் தன்மை மற்றும் மதிப்பு குறித்த பிற விவரங்கள் மற்றும் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து ஏலம் எடுக்கத் திட்டமிடும் ஏலதாரர்கள் தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12.** அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள்– சேவை வழங்குநர், M/s. 4Closure, பிளாக் எண்.605A, 6 ஆவது தளம், மைத்ரிவனம் கமர்ஷியல் காம்ப்ளக்ஸ், அமீர்பேட், ஹைதராபாத்–500038 மூலமாக அதன் ஒருங்கிணைப்பாளர் கர்நாடகா & கோவா, மொபைல் எண்.8142000809, srinivas@bankauctions.in & தெலங்கானா & AP மொபைல் எண்.8142000064, prakash@bankauctions.in & ஒடிசா, மேற்கு வங்கம்,சட்டீஸ்கர், வகி மாநிலங்கள் மொபைல் எண்.814200030, pradhan@ bankauctions.in & தமிழ்நாடு & கேரளா மொபைல் எண்.8142000735, dinesh@bankauctions.in & டெல்லி, என்சிஆர், பஞ்சாப், குஜராத், ஹரியாணா, & வடமாநிலங்கள் மொபைல் எண். 9515160064, prakash@bankauctions.ind & மகாராஷ்டிரா, குஜராத், & மத்திய பிரதேசம் மொபைல் எண்.8142000725, Arijit@ bankauctions.in மற்றும் மின்னஞ்சல்: info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண் – 9999078669–க்கு அனுப்பவும். **13.** உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத் தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும். மேலும் சலான் நகல் பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். **14.** மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் https://surl.li/uibiju கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும். **15.** மேலும் https://www.tatacapital.com/property–disposal.html என்ற இணைப்பையும் காண்க. **கவனத்தில் கொள்க–** டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது இந்த சொத்து விற்பனை/ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழே கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம்: தமிழ்நாடு
நாள்: 20.09.2024
ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்